தெனனாற்காடு மாவட்டம் கூடலூர் ஓ.டி. இல் ரெயில்வே மேம்பாலம்.

278—(*வினா எண் 11137)—திரு சா. ஜெயச்சந்திரன் மற்றும் திரு வி கோ. செல்லப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் கடலூர் ஓ.டி.—இல் உள்ள ரெயில்வே கேட்டின் மீது மேம்பாலம் கட்ட அரசு உத்தே சித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மதுரை மாவட்டம், சோழவந்தானிலிருந்து அலஙகா நல்லூர் வரை பேருந்து.

279—(*வினா எண் 12239)—திரு ஆ. சந்திரசேகரன் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டிவட்டம், சோழவந் தானிலிருந்து வாடிப்பட்டி வழியாக அலங்காநல்லூர் வரை பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

மாண்புமிகு திரு சு முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சோழவந்தானில் பணிமனை கட்டி முடிந்தவுடன் கரப்பேருந்து இயக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு). ஒரு மணிநேரம்தான் கேள்வி நேரம். இத்தனை நாட்களும் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சருடைய கேள்வி இடம்பெற்றது. அந்தக் கேள்விகள் முதலில் எடுக்கப்பட்டுவிட்டன(குறுக்கீடு). நேரம் இல்லை. எத் தனையோ உறுப்பினர்கள் எத்தனையோ கேள்விகளை கேட் டடீர்கள். எல்லோரையும் நான் திருப்திபடுத்தி விட்டேன். (குறுக்கீடு)ஒரு மணி நேரம்தான். ஒரு மணி நேரத்தில் இவ்வளவு தான் எடுக்க முடியும். கேஷீவாலிடி, இன்றைக்கு டிரான்ஸ் போர்ட் மினிஸ்டருடைய கொஸ்டியன்ஸ், அவ்வளவுதான் (குறுக்கீடு) வேறு வழி இல்லை.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பட் டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]